செ.வெ.எண்:66 நாள்:22.11.2019

**கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் ஒன்றியத்திற்குட்பட்ட பெரியமுத்தூர், சாந்தி நகர், பெரியமுத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.11.2019) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் ஒன்றியத்திற்குட்பட்ட பெரியமுத்தூர், சாந்தி நகர் பகுதியில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதியளிப்பு பணியாளர்கள் மூலம் மேற்கொண்டு வரும் தூய்மை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ,ஆ.ப., அவர்கள் இன்று (22.11.2019) ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின்போது பெரியமுத்தூர் ஊராட்சிகுட்பட்ட சாந்தி நகர் பகுதியில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதியளிப்பு பணியாளர்கள் மூலம் மேற்கொண்டு வரும் தூய்மை பணிகளையும், பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு கட்டுமானப்பணிகளையும் பார்வையிட்டார். மேலும், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் கழிவுநீர் கால்வாய் அமைத்து கொடுக்க கோரிக்கை விடுத்தனர். கழிவுநீர் கால்வாய் அமைக்க ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் வேளாண்மைத்துறையின் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்து வரும் விவசாயிகளின் விளை நிலங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். வேளாண்மைத்துறையின் ஆலோசனையின்படி விவசாயிகள் 23 ஏக்கர் பரப்பளவில் ஏடி.ட்டி-53 என்ற ரகத்தை பயிரிட்டுள்ளதை பார்வையிட்டார். நாற்று விட்ட நாள் முதல் 110 நாள் வரையில் இதன் விளைச்சல் காலம், நல்ல சாகுபடி விளைச்சல் அதிகம் வருவது குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து அரசு மேல்நிலைப்பள்ளி அணை பகுதியில் ஆய்வு செய்து அங்கு குடிநீர் வசதி, வகுப்பறை வசதிகள் குறித்து பள்ளி ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார். அப்போது பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் மூன்று கூடுதல் வகுப்பறை கட்டடிடங்கள் மற்றும் கழிவறை கட்டிடம் தேவைப்படுகிறது, அதேப்போல பள்ளிக்கு ஒகேனக்கல் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என தெரிவித்தார். மாவட்ட ஆட்சியர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கூடுதல் வகுப்பறை கட்டவும், குடிநீர் வசதி செய்யவும் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

மேலும், பள்ளியில் 11 ம் வகுப்பு பயிலும் மாணவியர்கள் அமரும் பென்ஞ்சுகளை சரிசெய்து தர கோரிக்கை வைத்தனர். பென்ஞ்சுகள் பழுது சரி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் துணை இயக்குநர் திரு.அகண்டராவ், வேளாண்மை அலுவலர் திருமதி. பிரியா, கிராம நிர்வாக அலுவலர் திருமதி.டி.பாஞ்சாலி ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**